1981 மே 9]

''மானியக் கோரிக்கை எண் 56, மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,55,75,06,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

1. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(ஆ) நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு, 1981 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்டமுன் வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

2. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி).

(ஆ) நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவையின் முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

4. தகவல் கோரல்

கள்ளுக்கடைகள் திறப்பை சில மாதங்கள் ஒத்திவைத்தல்

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்; துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் எல்லாம் பலமுறை சொன்னோம், இந்த கள்ளு சாராயக் கடைகளைத் திறக்க வேண்டாம், கொஞ்சம் தள்ளி வையுங்கள் என்று சொன்னோம். அதையும் கேட்காமல் நம்முடைய அமைச்சரவை கொண்டு வந்தது. இப்போது அதைக் கொஞ்சம் நிதானமாகச் செய்யலாம் அவசரக் கோலமாக அந்தச் சட்டத்தினைக் கொண்டு வருவோமானால், அரசாங்கத்திற்குக் கிடைக்கக்கூடிய வருமானம் கிடைக்காது. ஆகையினாலே இதை ஒரு மாதம் 2 மாதம் தள்ளிப் போடவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு இதற்கு ஏதாவது வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே இந்த மன்றத்திலே இருப்பவர்கள் எல்லாம் தீர்மானம் செய்து இதைத் திறப்பதாகவும், சட்டத்தைத் தளர்த்தவில்லை என்றும் அதில் திருத்தம் என்றுதான் சொல்லி இருக்கிறேன். ஆனால் இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறபோது அதை நாங்கள் விரைவுபடுத்துகிறோம் என்று சொன்னார்கள். அப்படி விரைவு படுத்துகிறபோது அரசுக்கு வருகிற வருமானம் தேவையான அளவுக்கு வராது என்று சொல்லி இருக்கிறார்கள். எனக்குக்கூட பலர் அவ்விதமாக எழுதி இருக்கிறார்கள். இதிலே மிகவும் அனுபவம் கொண்டவர்கள் பலர் கடிதம் எழுதி இருக்கிறார்கள். சொல்லப்போனால், உங்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும். தஞ்சாவூர் பரிசுத்த நாடார் — நான் சிறிய பையனாக இருந்த நேரத்தில் இருந்து அறிவேன் — அவர் தஞ்சாவூரில் இருந்து அறந்தாங்கி வரை கடை எடுப்பார், மற்றொரு பக்கம் கும்பகோணம் வரை கடை எடுப்பார். அப்படிப் பட்டவர்கள் எல்லாம் இன்றைக்குப் பிரபரேஷன் ஆப் டைம் போதாது. பிரபரேஷன் டைம் இல்லாததால் அரசுக்கு வர வேண்டிய வருமானம் வராது, நீங்கள் ஏலம் போடுவதைத் தள்ளிப்போட வேண்டும் என்று தெரிவித்து இருக்கிறார்கள். இப்படி பரவலாகக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு இருப்பதால், அதை நாங்கள் யோசித்து, இன்றைக்கு 1-6-81 அன்று, கடைகளைத் திறக்கலாம் என்று தீர்மானம் போட்டு, நோட்டிபிகேஷன் கொடுக்கப்பட்டு இருப்பதை, — 1–6–81 என்று சொன்னால் இன்னும் 20 நாள் தான் இருக்கிறது — அந்த நேரம் போதாது என்பதை அரசு ஏற்றுக்கொண்டு — அந்த 1–6–81 என்பதை 1–7–81 என்று மாற்ற முடிவு செய்துள்ளோம். இந்த வகையில் செய்தால் பிரபரேஷன் ஆப் டைம் அதிகம் கிடைக்கும். ஏலம் அதிகம் போகும். 12ம் தேதி ஏலம் என்றால், இன்னும் விளம்பரம் போடவில்லை. இன்று 9 ம் தேதி விளம்பரம் போட்டாலும், ஏலம் எடுக்க அதிகம் பேர் வரமாட்டார்கள். அரசுக்கு அதிகமாக வருமானம் வராது. ஆகவே, விளம்பரம் செய்ய 10 நாள் எடுத்துக் கொண்டு, ஏலம் போடுவதை 12 ம் தேதி என்பதை 25ம் தேதி என்றும் திருத்தி, கடைகள் ஆரம்பிப்பது 1-6-81 என்பதற்கு பதிலாக 1-7–81 என்று திருத்தி, இது எல்லோருக்கும் உதவிகரமாக இருக்கும் என்று இந்த அரசு கருதுகிறது என்று சொல்லி, இந்த வகையில் அரசின் முடிவைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன், முடிவுற்று, 11.5.1981 (திங்கட்கிழமை) காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.06 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.